# ஒரே கடவுள்

மேலே உள்ள தலைப்பின் பொருள் என்ன சொல்கிறது. தொடர்ந்து படிக்க உதவும்படி எளிய வேதாகம உண்மை உள்ளது, பல மதங்களின் ஆதாரமான நம்பிக்கைகளின் பிரிவுகள் தவறானவைகளாகவும் நீக்கும்படியாகவும் உள்ளன என்பதை இதை வாசிப்பவர் கண்டு கொள்ளலாம்.

திரித்துவம் என்ற கோட்பாடு கடவுள் ஒருவர் என்ற விஷயத்தில் உண்மையென்று கருதலாம் ஆனால் மூன்று நபர்களும் எப்பொழுதும் சமம், எப்பொழுதும் நிரந்தரம் என்று சொல்லப்படுகின்ற உறவுகளின் மத்தியில், ஒற்றுமை, சமம் என்று பார்த்தோமென்றால் ''இவர்களில் ஒருவர் பிதா'' என்பது தடைபடுகிறது, இந்த ஒரு கேள்வி நமக்கு ''புதிராகவும்'' புரிந்து கொள்வதற்கு அப்பாற்பட்டதாகவும் உள்ளது. ''திரித்துவ கடவுள்'' என்ற கோட்பாட்டை ஒத்துக்கொள்வதென்பது, ''ஒரு நம்பிக்கையின் செயலாக'' எந்த நிருபனமும், விளக்கமும் கொடுக்க முடியாத போதிக்கப்பட்டு வருகிற ஒரு காரியமாகும்.

உண்மையானது எதிர் திசையில் உள்ளது. 'பிதா' என்ற வார்த்தையில் மூவர் என்பது இல்லை. இது 'ஒரு நபர்' என்று சொல்லப்படுகிற கருத்துடை-யது. குழந்தையின் தந்தை, குடும்பத்தின் தந்தை, வீட்டின் தலைவர். என்று சொல்லப்படுகின்ற ஒருவர். இது தனி நபரான முதன்மையானவர். அளித்தல் பாதுகாத்தலில் அக்கரை உள்ளவர். மற்றவர்கள் அவர்களுடைய போதனைகளுக்காகவும் வழிநடத்துதலுக்காகவும் நோக்கிப்பார்க்கப்படுகின்ற ஒருவர், அதிகாரமான வார்த்தை படைத்த ஒரு தலைவர் தொண்டு செய்கின்ற ஒரு குடும்பத்தின் அன்பு தந்தை இப்படி பல அர்த்தங்களை சொல்கின்றது, ஒன்று என்ற இந்த வார்த்தையில் மாற்ற முடியாத அர்த்தம் ஒட்டியுள்ளது, இது நம்முடைய மானிட வர்க்கத்தின் எண்ணத்தைபோல வேதாகமத்திலும் பராமரித்து காட்டப்படுகிறது.

## எல்லோரையும் விட மேலான ஒரு நபர்

உதாரணமாக, ஜெபத்தை ஆரம்பமாக அடிக்கடி உபயோகிக்கப் படுகிறோம், 'பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதாவே' லூக் 11:2 அல்லது மறுபடியும் 'எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு எல்லார்மேலும் இருக்கிறார்' எபே 4:6 'பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு' 1 கொரி 8:6 'என் தேவன் உங்கள் தேவன்' யோவ 20:17 இயேசு சொன்னார் இந்த பகுதியில் இரண்டு உண்மைகள் உள்ளன, முதலாவது பிதாவானவர் 'ஒரு நபர்' ஏனென்றால் மற்றவர்களின் தகப்பனார் ஒருவராகத்தான் இருப்-பார். அப்படி அவர்களைப்போல பிதாவானவரும் இருக்கின்றார்.

இரண்டாவது, தந்தையானவர் மற்றவர்களைவிட மேலானவர். 'எல்லார் மேலும்' எபே 4:6 'எல்லோருக்கும் தலைவர்' 1 நாளா 29:11 'பிதா என்னிலும் பெரியவராகயிருக்கின்றார்' யோவான் 14:28 என்று சொன்னது இயேசுவானவரையும் சேர்த்து.

இந்த பகுதிகள் எளிமையும் ஆதாரமுமானவைகள், அது மற்ற இரண்டு நபர்கள் சமமாக உள்ள வேதாகம பகுதிகளின் நம்பிக்கைக்கு ஆதரிக்கும்படி எடுக்கப்பட்டு மறுபடியும் வாசிக்கப்பட வேண்டும்.

'விசுவாச பிரமாணங்களான' அப்போஸ்தலர் விசுவாச பிரமாணம் நீசன்ஸ் மற்றும் 'அதனுசியன் விசுவாச பிரமாணங்களை' தெரிந்து கொள்ள இதை வாசிப்பவருக்கு உதவியாக உள்ளன. முதலாவதான அப்போஸ்தலர் விசுவாச பிரமாணத்தில், அப்போஸ்தலர் நாட்களில் மிக நெருக்கமாக இருந்த இந்த விசுவாச பிரமாணத்தில் தனிநபரின் மேலான்மையை ஏற்றுக் கொள்ளப்பட்டது. நான் வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனை விசுவாசிக்கிறேன். அவருடைய குமாரரும் நம்முடைய ஆண்டவருடைய இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். இந்த அடிப்படையான உண்மை தொடர்ந்து இருப்பதற்கு பதிலாக நீசன்ஸ் விசுவாச பிரமாணத்தில் அது மங்கலாகி கொண்டே புனித அதனுசியன் விசுவாச பிரமாணத்தில் மறைந்தே விட்டது நிரந்தர வல்லமை நித்தியத்துவான ஒன்றை மூன்று நபர்களுக்கும் கொடுக்கும்படியாயிற்று. மூன்று நபர்களான திரியேக தேவன் ஸ்தோத்தரிக்கப்படுவராக என்ற பாடலாயிற்று. யாராயினும் இந்த விசுவாச பிரமாணங்களை பார்க்கும்போது கோட்பாடில் மாற்றம் உண்டு என்று நிச்சயம் சொல்வார்கள். மேலும் மாற்றப்பட்ட இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக சில வேத பகுதிகளை உபயோகித்துள்ளனர் என்றும் அறிந்துக் கொள்வார்கள், இதிலிருந்து எது உண்மை என்பதுதான் கேள்வி. இதற்கு பதில் ஆதி அப்போஸ்தலர் விசுவாச பிரமாணமே ஏற்றதாக உள்ளது இது அப்போஸ்தலர்களின் விசுவாசத்தை ஒன்றாக வெளிப்படுத்துகிறது இந்த நம்பிக்கை கிறிஸ்துவானவருக்கும் இருந்தது. இது மற்றவைகளுடன் ஒப்பிடும் போது மற்ற இரண்டு பிரமாணங்கள் பெறமுடியாத ஒரு சரியான தகுதியை இது பெறுகிறது. இல்லையென்றால் இது அதே உண்மையை வைத்துக்கொண்டு அதிலிருந்து வேதத்தின் சில பகுதிகளை' தவறாக பயன்படுத்திக் கொண்டேயிருக்கும். மேலும் தொடர்ந்து செல்ல இதோ இரண்டு காரியங்கள்.

## கடவுள் ஒரு மகிமையின் ஐக்கியம்

இஸ்ரவேலின் கடவுள் அவருடைய மக்களுக்கு சொல்லும்போது, இஸ்ரவேலேகேள் 'நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே' உபா 6 : 4

இந்த கூற்று பழைய ஏற்பாட்ன்டி குறிப்புபடி முழுவதும் எதிரிடையாக உள்ளது. இஸ்ரவேலின் தேவன் அவரைகுறித்து விவரிப்பதை தொடர்ந்து வருகின்ற பகுதிகளில் நாம் காணலாம்.

'நானே முந்தினவரும், நானே பிந்தினவருந்தானே; என்னைத்தவிர தேவன் இல்லையென்று இஸ்ரவேலின் ராஜாவுமாகிய கர்த்தரும் சேனைகளின் கர்தருமாகிய அவனுடைய மீட்பர் சொல்கின்ருர்.' 'என்னைத்தவிர தேவன் உண்டோ!' நானே கர்த்தர் வேருெருவர் இல்லை' 'நானே கர்த்தர் இது என்னுடைய நாமம்; என் மகிமையை வேருெருவனுக்கு கொடேன்'

ஏசா 44:6-8, 48:18, 42:8.

உபா 6:4 பகுதியை நன்ருக தியானித்து 'ஒரு நபர் மேலாதிக்கம்' என்ற உண்மையை உயர்த்தும்போது இந்த பகுதியே எதிராக உள்ளது. முதலாது தேசத்தை எழுதும்போது, 'ஓ இஸ்ரவேலே கவனி' (அல்லது கேள்) இவர்கள் இன்று யூதர்கள் என்று அழைக்கப்படுகின்ற ஆபிரகாமின் சந்ததியான பன்னிரண்டு கோத்திரத்தார். இந்த தேசத்துடன் யார் பேசுகின்ருர் ? உபா 5:1 க்கு மறுபடியும் செல்லுங்கள், மேசே எல்லாரையும் அழைத்து அவர்களை நோக்கி இஸ்ரவேலரே நான் இன்று உங்கள் காதுகள் கேட்க சொல்லும் கட்டளைகளையும் நியமங்களையும் கேளுங்கள் நீங்கள் அவைகளின் படி செய்யும்படி அவைகளை கற்றுக்கொள்ளுங்கள் 5ம், 6ம் அதிகாரம் முழுவதும் தொடர்ந்து வாசித்தால் தேவன் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்கிருர் என்று மக்களுடன் மேசே பேசுகிருர் என்பதை காணலாம். நம்முடைய கடவுள் என்று மேசே தன்னையும் சேர்த்து சொல்லும் போது தேசத்தின் கடவுள் மேசேயின் கடவுள் என்று சொல்கிருர். 'நம்முடைய கடவுள்' என்று மேசே என்ன சொல்கிருர் ? அவர் சொல்கிருர், கடவுள் ஒருவரே, ஒருநபரே. ஏசாயாவில் எடுத்து சொன்னதுபோல யோகோவா, வல்லமையுள்ள தேவன், அல்லது இஸ்ரவேலர்கள் ஆராதிக்கிறவர் என்ன பெயராயினும் அவர் நிகரில்லாதவர். உபா 6:4ம் வசனம் இஸ்ரவேலின் தேவன் ஒரு மகிமையின் 'ஐக்கியம்' என நம்முன் கொண்டு வருகிறது. வெஸ்ட்மினிஸ்ட்டர் விசுவாச பாவ அறிக்கை மாறுபாடன எதிராக உள்ளது.

## ஒருவர் எந்த வழியில் ?

அடுத்த பகுதி யோவான் 10:30 'நானும் என் பிதாவும் ஒன்ருக இருக்கிரோம்' எந்த வழியில் அவர்கள் ஒன்ருக இருந்தார்கள் என்ற கேள்வி வருகிறது. அவர்கள் இரு நபர்கள் ஒருவர் பூமியில் இருந்தார், மற்ருெருவர் பரலோகத்தில் இருந்தார் பரலோகத்திலிருப்பவரைப்பார்த்து அடுத்தவர் 'என்பிதா என்னைக்காட்டிலும் பெரியவர்'

என்று சொன்னர், வெளிப்படையாக இந்த சமமானவர்கள் நிரந்தரமான வர்கள் என்ற கருத்து மற்றபகுதிகளில் உள்ளதுபோல இந்த பகுதிகளில் வாசிக்கின்ற இந்த கருத்து தவருன நம்பிக்கைக்கு உதவும்படியாக உள்ளன, ஏனென்ருல் இதில் திரித்துவத்தில் சமம் என்று சொல்லப்படுவதிற்கு ஒன்று மில்லை. பின்பு எந்த வழியில் அவர்கள் இருவரும் ஒன்று! இதற்கு பதில் இயேசுவானவர் பேசின வார்த்தைகளில் உள்ளது. நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையது. யோவான் 14:24. இயேசுவானவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினர். எனக்கு சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவின் சித்தத்தை தேடுகிறேன். யோவான் 5 : 30 'என்னுடைய சித்தத்தின்படி அல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' லூக்க 22:42. இயேசுவானவர் பிதாவின் வார்த்தைகளை நிறைவேற்றினுர். 'நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளை செய்யவேண்டும்' யோ 9:4. ஆதலால் இயேசுவானவர் நிறைவேற்ற வந்த காரியங்களில் இந்த இரண்டு பேருக்கும் எந்த முரண்பாடும் இல்லை. அவர் என்றுமே கீழ்படியாத மகனுக இருந்ததே இல்லை. அவர்களுடைய இணக்கம் ஒரே மனதுடன ஒரே கருத்துடன் முழுமையாக இருந்தது. இந்த வழியில் இயேசுவும் பிதாவும் ஒன்ருக இருந்தார்கள். இரண்டு சாதாரண மனிதர்கள் சில சமயங்களில் ஒரு காரியத்தை திட்டம் தீட்டுவதில் நிறைவேற்றுவதில் ஈடுபடும்போது அவர்கள் ஒன்ருக இருக்கின்றனர் அந்த வழியில் அவர்கள் ஒன்ருக சிந்திப்பதிலும் அதை நிறைவேற்றுவதிலுல் தங்களை அர்ப்பனித்துக் கொள்கின்றனர்கள் இதை 'சேர்ந்திருப்பது' என்று அழைக்கலாம் இருந்தும் அவர்கள் பலவழியில் மாறுபட்டிருப்பாகள். கணவன் மனைவி என்ற விஷயத்தில் கணவர் தலைவராக இருப்பார் எபே 5:23 இருந்தும் அவர்கள் 'திருமண இணைப்பில்' ஒன்ருக இருப்பார்கள். யோவான் 10:30 ஐ பரிசீலித்தால் சொல்லப்பட்டுள்ள திரித்துவத்தை சரியென்று சொல்லப்படவைக்கும் எந்த முயற்ச்சியும் தோல்வியாகிவிடும்.

## பரலோகம் எங்கே ?

தந்தை என்ற வார்த்தையானது ,வீடு' என்ற கருத்தை தெரிவிக்கின்றன, ஒரு இடம் அல்லது சூழ்நிலை இப்படி இந்த கேள்வி கேட்கப்படலாம் தகப்பனுருக்கு ஒரு 'வீடு' உண்டா ? அவர் வசிக்கும்படி ஏதாவது 'இடம்' உண்டா? ஆம் வேதத்திலுள்ள வார்த்தைகளில் பதில் காணப்படுகின்றன. 'பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே' லூக்க 11:2 'பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலிருந்து நீர் கேட்பீராக' 2 நாள 6:2. பரலோகத்தில் ஒரு தேவன் உண்டு' தானி 2:28 'பரலோகத்தில் இருக்கின்ற உங்கள் பிதா' மத் 5:16

ஆனால் பரலோகம் எங்கே? பரலோகம் என்பது நீதிமான்கள் மரிக்கும் போது அவர்களின் ஆத்துமாக்கள் செல்லுகிற இடம் என்று பலர் நம்புகின்றனர், நமக்கு தெரிந்த பாடலான 'அவருடைய எல்லையற்ற கிருபையின் ஈவால் பரலோகத்தில் இருக்கும்படி ஏற்றுக் கொள்ளப்பட்டேன், அங்கு அவருடைய முகத்தை பார்க்கும்படியாகவும் காலமெல்லாம் மகிமையடையவும் எப்பொழுதும் ஜீவிக்கும்படியாகவும் இந்த ஆத்துமா அழிவுள்ள சரீரத்திலிருந்து விடுபடுகிறது என்ற வார்த்தைகளில் உள்ள ஒரு அனுபவமே' ஆனால் அது வேதாகமத்தின் பரலோகமல்ல, அல்லது எந்த மனிதனும் மரிக்கும்போது எந்த வழியிலும் செல்கிற என்று சொல்வது உண்மையும் அல்ல

## பரலோகம் எங்கே? கேள்வி அப்படியே உள்ளது.

இது சிருஷ்டிப்பின் மிகப்பெரிய மையம். சந்திரன், பூமி, கிரகங்கள் நட்சத்திர மண்டல ஒளி விதி எல்லாம் இந்த மையத்தை சுற்றிவருகின்ற என்ற உண்மை கூற்றினால் இது குறிப்பாக சொல்லப்பட்டுள்ளது, சூரியனை சுற்றி சந்திரன் பூமி கிரகணங்கள் வருவதுபோல இந்த மையத்தையும் சுற்றுகின்றன, இது மையங்களின் மையத்தை சென்றடையும்படி மையங்களின் தொடர்ச்சியாக உள்ளது. வேதாகமம் பரலோகம் என்பது ஒரு 'இடமாக' விவரிக்கும்போது இப்படிபட்ட ஏற்பாடு முடிவில்லாமல் செல்கின்றது ஒரு பெரிய மைய இடத்திற்கு வராது என்று நினைப்பது அறியாமையாகும். இந்த மையம் நம்மிடத்திலிருந்து எவ்வளவு தூரம் உள்ளது என்பது நமக்கு தெரியாது. அல்லது எந்த விதமானது பரலோகம் என்பதும் நமக்கு சொல்லவில்லை. இருந்தாலும் சில பாடல்கள் இப்படியாக சொல்கின்றன. 'தங்கவீதிகள்' 'தந்தத்திலான இடங்கள்' கடவுளையும், இயேசுவானவரையும் புகழ்ந்துபாடுகின்ற வானசேனைகளின் கூட்டம் அங்கு உள்ளன. இந்த விளக்கங்கள் சரியானவையல்ல. உண்மையில் ஒன்று என்னவென்றால் அவர்கள் பரலோகம் என்பது ஓர் இடம் என்று மனதில் பதியவைக்கின்றனர்.

## ஆண்டவரின் கெம்பீரமான மகிமை

அவருடைய கெம்பீரமான படைப்பின் எல்லா மையங்களின் மையம் தான் எல்லாரின் மிகப்பெரிய பிதாவானவரின் 'வீடு' அவருடைய படைப்பை சுற்றி கெம்பீரமான மகிமையில் அவர் வீற்றிருக்கிறார். 'நீரே அநாதியாய் என்னென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்' சங் 90:2.

'நீர் ஒருவரே கர்த்தர் நீர் வானங்களையும் வானாதி வானங்களை அவைகளுடைய சர்வ சேனையும், பூமியையும் அதிலுள்ள எல்லா வற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லா வற்றையும் உண்டாக்கினீர், அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வானசேனைகள் உம்மை பணிந்து கொள்கின்றன. நெகமியா 9:6.

எங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே சதாகாலங்களிலும் தேவரீருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக. கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள். வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள், கர்த்தாவே இராஜ்ஜியம் உம்முடையது, தேவரீர் எல்லாருக்கும் தலைவனாய் உயர்ந்திருக்கின்றீர். 1 நாளா 29- 10:11

இந்த வார்த்தைகளின் மேன்மையான தோற்றம் அதிக வல்லமை படைத்தவைகளாக உள்ளன. இவைகள் முக்கியப்படுத்தி சொல்கிற பெரிய உண்மையை நாம் கவனிப்போம். கடவுள் எல்லாவற்றையும் செய்தார், அவர் அவைகளை எப்படி செய்தார்? கடவுள் எல்லாவற்றையும் பாதுகாக்கிறார் அவர் எந்த வழியில் செய்கிறார்? இதற்கு பதில் அவருடைய வல்லமையினாலும் அவருடைய ஆவியினாலும்தான் 'உன்னதமானவருடைய வல்லமை' லூக்க 1:35. இந்த அளவிடமுடியாத வல்லமை அவர் வெளியே அனுப்புகிறார். சூரியனிலிருந்து வெளிச்சம் பிரகாசிப்பதுபோல கடவுளுடைய வல்லமை அல்லது ஆவி. மகிமையான அவருக்குள்ளிருந்து எல்லா இடங்களிலும் ஒளி வீசுகிறது. இந்த உணர்ச்சிமிக்க அளவிடமுடியாத அவருடைய வல்லமையினால் எல்லாவற்றுடன், நடக்கின்ற எல்லா காரியங்களுடன் அவர் தொடர்பு கொள்கின்றார் அதனால் அவருடைய சித்தமில்லாமல் ஒரு அடைக்கலான் குருவியும் கூட தரையில் விழாது. மத் 10:29.

'நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது அவைகள் சிருஷ்டிக்கப்படும்' சங்கீதம் 104:30.

'தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்' யோபு 26:13.

'தேவரீர் உம்முடைய மகா பலத்தினால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்' எரே 32:17.

'தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்' ஆதி 1:2.

'தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்' யோபு 33:4.

'ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது' சங் 36:9.

தம்மிடத்திலிருந்து அவர் அனுப்புகிற அவருடைய வல்லமையினால் அவருடைய சிருஷ்டிப்பின் செயல்கள் இவைகள். அவருடைய ஆவியினால் எல்லாவற்றையும் அவர் செய்தார். அவருடைய ஆவியினால் எல்லாவற்றை யும் அவர் தாங்குகிறார்.

## அடிப்படையான ஒரு வல்லமை

நம்முடைய வெளிச்சத்தையும் அதன் செயல் பாட்டையும் நடத்தும் படியான ஒரு சக்தியை உற்பத்தி செய்கிற ஒரு சக்தி நிலையத்தை பார்ப்பது போல ஆரம்ப இடமாக பொதுவான சக்தி ஒன்று உண்டு என்பது இன்று மனிதர்களுக்கு தெளிவான ஒன்று, அந்த சக்தியை துண்டித்து அந்த நிலையத்தை அழித்துவிடு, பின்பு அதை சார்ந்துள்ள எல்லாமே நின்றுவிடும்; அதுபோல கடவுள் அவருடைய ஆவியையும் சுவாசத்தையும் அவருக்குள் சேர்த்துக்கொள்ளும் போது 'மாம்சமான யாவும் ஜீவித்துபோம்' யோபு 34 : 11-15 மனுஷன் தூளுக்கு திரும்புவான். சிருஷ்டி திரும்ப எடுத்துக் கொள்வது அந்தவிதமான ஆபத்துதான். அவருக்குள் நாம் பிழைக்கிறோம் அசைகிறோம், இருக்கிறோம் என்பது எவ்வளவு உண்மை அப் 17:28

பொருள்களின் சாராம்சம் அது தான் செய்யப்பட்ட பொதுவான சக்திக்குள் மாற்றப்படுகிறது, பலமாக இருக்கின்ற ஒருசெய்தி சக்தியாக மறுபடியும் மாறுகிறது, சரியான செயல்முறை படுத்தும்போது எங்கும் நிரம் பத்தக்க பெரிய சக்தியின் கடலாக மறுபடியும் இணைகிறது. விஞ்ஞானம் சக்தியை அழைப்பதை வேதாகமம் ஆவி அல்லது வல்லமை என்றழைக்கிறது அதை உண்டாக்குகிறவர் கடவுள் அதன் மூலம் அவர் எங்கும் இருக்கின்றார். எங்கும் வியாபித்துள்ள ஆண்டவருடைய ஆவியானவரின் சமூகத்தை சங்கீதம் 39-ல் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

'உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கு போவேன்?
உம்முடைய சமுகத்தை விட்டு எங்கு ஓடுவேன்'?

நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கின்றீர்! நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் நீர் அங்கேயும் இருக்கின்றீர்; நான் விடியற்காலத்து செட்டைகளை எடுத்து சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய் தங்கினாலும் அங்கேயும் உமது கை என்னை நடத்தும். உமது வலது கரம் என்னை பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும் இரவும் என்னைசுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகார படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி. சங்கீதம் 139 : 7:12

## சிருஷ்டிப்பவர் தாங்குபவர் ஒருவரே

எல்லா காரியங்களும் தங்களுடைய சிருஷ்டிகர், தாங்குபான் என்று ஒரு கடவுளை குறிப்பிடுகின்றன. 'இயற்கையை' மனிதர்கள் என்ன அழைக்கின்றனர், அதனுடைய ஆளுகையின் நியமத்துடன், அதனுடைய சரியான இடப்பெயற்ச்சியும், அதன் வல்லமையான சாட்சியும், திட்டமான கட்டத்தின் காரணத்தையும் விளைவையும் அது உண்மையில் 'தன்னுடைய எஜமானர்' கவனத்தின் முன்பு தெளிவான திருப்தியாக உள்ளது. ஒரு சரியான 'சிற்பி' எல்லாவற்றையும் திட்டமிட்டவர், எல்லாம் செய்தவர், எல்லாவற்றையும் வழி நடத்துபவர், மகிமையான மிகப்பெரிய தலைமையானவர். எல்லா காரியங்களின் மையம் அவருக்குள் இருக்கின்றன, எல்லா சிருஷ்டிப்பின் தாங்கும் வல்லமை அவருக்குள்ளிருந்து பாய்கிறது. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். தேவரீர் ஒருவரே பரிசுத்தர் எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாக தொழுது கொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள். வெளி 15 : 3-4.

## ஆவி இரண்டு கருத்துகளில் பயன்படுத்துபடுகின்றன

முன் சொல்லப்பட்ட ஒவ்வொரு வேத பகுதியில் தனிப்பட்ட பிரதி பெயர் இருப்பதை ஜாக்கிரதையாக கவனியுங்கள்; நான், அவர், அவருடைய அவருக்கு, நீங்கள், உங்களுடைய, உங்களுக்கு, இது கடவுள் ஒருவர் அல்ல பலர் என்ற நம்பிக்கையை தவிர்த்து, தனிநபர் என்ற ஒருவருக்கு மட்டுமே இது பொருந்துகின்றது. மேலும் தேவனுடைய ஆவியை அவருடைய வல்லமையாக காட்டும்போது திரித்துவம் என்று சொல்லப்படுவதிலிருந்து ஒரு நபர் மறைந்து விடுகிறார் என்பதையும் கவனியுங்கள். இந்த உண்மையின்படி இந்த கோட்பாடு அழிக்கப்படுகிறது. ஏனென்றால் அதில் இருக்கும்படி மூன்று தேவைப்படுவதால். தொடர்ந்து பார்க்கும்போது தேவனுடைய ஆவி இரண்டு கருத்துக்களில் பேசுவதை நாம் காணலாம். முதலாவது 'விடுதலையின் ஆவி' அது அவருடைய சக்தியாக எங்கும் வியாபித்துள்ளதும், சிருஷ்டியை தாங்கும்படியாள வல்லமையாக உள்ளது. சங்கீதம் 51: 12, சங்கீதம் 139 : 7-14. இரண்டாவது 'பரிசுத்த ஆவியாக' பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாடு காலங்களில் அற்புதங்களை செய்யவும், தீர்க்க தரிசனங்களை சொல்லவும், ஆண்டவராகிய தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உண்டாக்கவும் இந்த வல்லமை ஒரு பகுதியாக இப்படிபட்ட விசேஷ காரியங்களை செய்ய தனியாக அமைக்கப்பட்டது.

'உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்து கொள்ளாமலும் இரும்' சங்கீதம் 51:11. இது தீர்க்க தரிசியான தாவீதின் வார்த்தைகள். அப் 2:30 இவர் பரிசுத்த ஆவியினுல் அசைக்கப்பட்டு தேவனுடைய பரிசுத்த வான்களில் ஒருவராகவும், பழைய ஏற்பாட்டு காலங்களில் தீர்க்க தரிசனம் உரைத்தவர். 2 பேதுரு 1. 21 'பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னத மானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறப்பது பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்' லூக்கா 1:35.

தேவ தூதனுகிய காபிரியேல் இயேசுவானவரின் தாயாகிய மரியாளுக்கு சொன்ன இந்த வார்த்தைகள் திரித்துவத்திற்கு ஒரு ஆட்சேபத்தை உண்டுபண்ணுகின்றன. ஏனென்ருல், பரிசுத்த ஆவி ஒரு நபராஞல் அந்த குழந்தைக்கு தகப்பனுர் யார்? 'பிதாவாகிய தேவனு' அல்லது 'பரிசுத்த ஆவியா? இயேசுவானவரும் அவருடைய வார்த்தைகளில் குறிப்பிடும்போது அவருடைய தகப்பனுரை கடவுளுக்கு ஒரு கடவுள் என்று சொல்லாமல், தகப்பன் மகன் என்ற உறவுமுறையில் குறிப்பிடுகின்ருர். இந்த வழியில் வேதத்தின் உண்மையான 'பிதாவுக்கு ஒரே பேருன' யோவான் 1:14, 'பிதாவின் வல்லமையினுல் கர்பவதியாகி ஸ்திரியினிடத்தில் பிறந்தார்.' லூக்கா 1:35. கலா 4:4. குமாரனை உண்டுபண்ணும் அப்படிபட்ட பிதாவின் வார்த்தை அல்லது வாக்கு தத்தமானது இயேசுவானவர் மரியாளுக்கு குமாரனுக பிறந்தபோது அது நிறைவேறிற்று. அவரை மனிதர்கள் பார்த்தபோது, தேவன் வாக்குதத்தம் செய்ததை 'அந்த வார்த்தை மாம்சமானுர்.' யோவான் 1:14, ஆதி 3:15, 2 சாமு 7:12-16, அப் 2:29-31. ஒரு புதிய படைப்பு உலகத்தில் தோன்றியது நம்மைபோல பழையபடி இல்லாமல், எல்லா புதியனவைகளாக இருப்பதுபோல தெய்வீகப்படி தேவகுமாரனும், நம்முடைய மாம்ச இரத்தப்படி மானிடபிரகாரமாக மனித குமாரன்.

'எல்லாவிதத்திலும் நம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்த' எபி. 2:16-17 ரோமர் 8:3.

இந்த சான்று குமாரனின் வல்லமை, பிதாவாகிய தேவனுடன் சமம், நித்தியத்துவம் போன்ற திரித்துவ 'புதிரை' அழிக்கின்றன.

## உருவகப்படுத்துதல்

தேவனுடைய ஆவி முன் சுட்டி காட்டினபடி விசேஷமான காரியங்கள் செய்ய பயன்படுத்தப்படும்போது மற்றவைகளும் கூட அதே வகையில் இருக்கும், இவைகள் மனிதர்களாக அடிக்கடி ஒரு நபருக்குரிய அர்த்தத்தில்

பேசப்படுகின்றன. இப்படி வேதாகமம் பல காரியங்களுக்கு இந்த வழக்கத்தை உபயோகிப்பது நீட்டிகொண்டே செல்கிறது, உதாரணமாக, மரங்கள் பேசுகின்றன, மரித்த மனிதர்கள் பேசுகின்றன ஏசா 14:8-12. மலைகள் பாடுகின்றன. ஏசாய 44:23 எழுதினபடி அவைகள் அப்படி செய்வதில்லை, ஆனால் கற்பனைகளுக்காகவும் உவமைகளுக்காகவும் உயிருள்ள காட்சிகள் உயிரில்லாதவைகளாக உபயோகப்படுத்துவதும், உயிரில்லா காட்சிகள் உயிருள்ளவைகளாகவும் பேசுகிறபடி, செயல்படுகிறபடியாக சொல்லப்படுகின்றன.

நியாயதிபதிகளில் 9:7-15 நாம் பார்க்கும்படியாக ஒரு கதை தனிப்பட்ட கருத்தில் அதனுடைய பாத்திரங்களை சொல்லும்போது வேதாகமம் உதாரணத்துடன் விளக்குவதில் அதிக சிறந்ததாக உள்ளது.

ஞானம் எழுத்தின்படி அல்லது சொல்படி கடவுளுடைய குணமாக உள்ளது. நீதிமொழிகள் 8, 9-ம் அதிகாரத்தில் ஒரு பெண் பேசுகிறபடி தானே உபயோகிக்கிற தனிப்பட்ட பிரிதி பெயர்களாக 'அவள்' மற்றும் 'அவளுடைய' என்று உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு உருவகப் படுத்தலாகும். நனிநபர் என்ற கருத்தில் ஒரு உரிச்சொல் கொடுக்கப்பட்டுள்ளது, ஏனென்றால் இது ஒரு நபருக்கு உரித்ததாக உள்ளது ஒரு ஞானமுள்ளவருக்கு. ஞானம் என்பது ஒரு பெண் என்று யாரும் கருதமுடியாது, இந்த உபயோகிக்கிற வழக்கத்தை அறிந்தவர்கள் பரிசுத்த ஆவி ஒரு நபர் என்று எல்லாவல்லமையுள்ள மனிதர் (கடவுள்) அவருடைய வல்லமை சாதாரண செயல்பாடுகளில் உபயோகிக்கும்போதும், அதை தனிப்பட்ட நபருக்கான அர்த்தத்தில் பேசும்போதும் உரிமையுடன் சொல்லமாட்டார்கள். ஆதி திருச்சபையில் திரித்துவத்தின் தவறான கோட்பாடு புகுந்து கடவுள் ஒரு மனிதர் என்ற ஒரு உண்மையை காட்டி பரிசுத்த ஆவியை உருவகப்படுத்துதல் போன்றவை புகுந்து மனிதர்களை மற்றவர்கள் கடவுள்களாக நம்பும்படி செய்யவைக்க மாறாக இன்று நாம் வைத்துள்ள இந்த நம்பிக்கையான 'எல்லாவற்றிற்கும் மேலான பிதாவாகிய ஒரே கடவுள்' எபே. 4-6 என்பதையும் மாற்றாது. தனிப்பட்ட உபயோகம் பார்க்கப்படுவதும் அது விசுவாசமானது அதற்கு தகுந்தபடி சரிசெய்யபடுகிறது இதை வாசிப்புவர் இந்த தவறான திரித்துவ நம்பிக்கையிலிருந்து விடுபட்ட நம்பிக்கையில் சந்தோஷப்படுவதும் 'யோகோவா' தனியாக இருப்பவர், 'நிகரில்லாதவர்' 'மாறாதவர்' எப்பொழுதுமான வல்லமையுள்ள தேவன் என்ற நிச்சயத்தில் மகிழ்ச்சியடையலாம்.

## உங்களின் பதிலுக்கான கேள்விகள்

1. கடவுள் ஒருவர் என்று நீங்கள் வாசிக்கும்போது என்பிதா என்னிலும் பெரியவர் என்று இயேசுவானவர் சொன்னதின் பொருள் என்ன ?

2. திரித்துவத்தின் தவருன தத்துவத்திற்கும், கடவுளின் மகிமையின் ஐக்கியம் என்ற வேதாகமத்தின் கருத்திற்கும் உள்ள வேறுபாட்டினை உங்களால் விளக்கமுடியுமா ?

3. தேவனுடைய ஆவி என்பதின் பொருளை விளக்கு ?

4. பரலோகத்தை குறித்து நாம் எவ்வளவு அறிந்துகொள்ள முடியும் ?

5. கடவுள் எப்படி எல்லா காரியங்களையும் காப்பாற்றுகிருர் ?

6. ஏசாய 44 : 61 ஆதியும் நானே அந்தமும் நானே என்னைதவிர தேவன் இல்லையென்று ஆண்டவர் சொன்னதின் பொருள் என்ன ?

7. வேதாகமத்தின் கடவுள் ஒருவரே என்ற போதனையை முக்கியம் என்று நீ ஏன் நினைக்கிருய் ?